1979 நவம்பர் 2]

(முற்பகல் 9-50)

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : தலைவரவர்களே, கோவை மருத்துவமனையில் நரம்பியல் பிரிவை அமுலாக்குவதற்கு சமீபத்தில் உத்தரவு போட்டதை வரவேற்கிறேன். ஆனால், அந்தப் பிரிவை எவ்வளவு சீக்கிரம் அமலுக்குக் கொண்டுவர முடியுமோ அவ்வளவு சீக்கிரம் அமல் படுத்துவதற்கு இந்த அரசு எடுத்துக் கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன என்ன என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

திரு. இரா. அருணாசலம் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தலைவர் அவர்களே, அரசு ஆணை எண் 1315, சுகாதாரம், நாள் 27—7—1979-ல் உத்தரவு போடப்பட்டுள்ளது. விரைவில் அமுல்படுத்தப்படும்.

வேலூர் காசநோய் மருத்துவமனை

* வினா எண். 78—திரு. ப. சந்திரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் வேலூரில் உள்ள காசநோய் மருத்துவ மனையில் (T. B. Sanatorium) இரத்த வங்கியும், ஆபரேஷன் தியேட்டரும் இல்லாதிருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், இதற்கு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

திரு. இரா. அருணாசலம் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : (அ) ஆம்.

(ஆ) 7 கி.மீ. தொலைவில் உள்ள வேலூரிலுள்ள தலைமையிட மருத்துவமனையில் இரத்த சேமிப்பு நிலையமும், அறுவை அரங்கமும் உள்ள தால் அறுவை சிகிச்சை தேவைப்படும் நோயாளிகளை உடனே இம் மருத்துவ மனைக்குச் சிகிச்சைக்காக இடமாற்றம் செய்யப்படுகிறது. எனவே வட ஆற்காடு மாவட்டம் வேலூரிலுள்ள காசநோய் மருத்துவமனைக்குத் தனியாக இரத்த வங்கியும் ஆபரேஷன் தியேட்டரும் தேவையில்லை என மருத்துவம் மற்றும் குடும்பநல இயக்குநர் தெரிவித்துள்ளார்.

திரு. இரா. மார்க்கபந்து : பேரவைத் தலைவரவர்களே, ஆபரேஷன் தியேட்டர் பற்றிப் பரவாயில்லை. பிளட் பாங்க் அத்தியாவசியமாகத் தேவைப்படுகிற காரணத்தால் அதையாவது ஏற்படுத்திக் கொடுக்க முயற்சிகள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதிலே ஒன்றும் சிரமம் இருக்காது. இங்கே இருக்கிற ஒரு பிரான்ச்சை அங்கே மாற்ற வேண்டியதுதான். நோயாளிகளின் சிரமங்களைப் போக்கு வதற்கு பிளட் பேங்க் நிறுவ அரசு முயற்சிகள் எடுத்துக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. இரா. அருணாசலம் (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவர வர்களே, குருதி சேமிப்பு வங்கி அருகாமையில் உள்ள வேலூரிலே இருப் பதாலும், நோயாளிகள் உடனடியாக அங்கு செல்வதற்கு பேருந்து வசதி இருப்பதாலும் அதை வைத்து நோயாளிகளுக்கு நல்ல முறையில் சிகிச்சை செய்யப்படுகிறது.

திரு. இ. தமிழரசன்: தலைவாவர்களே, வேலூர்—பெண்ணாத்தூரில் உள்ள காசநோய் மருத்துவமனையில் இதுவரையில் எத்தனை சிறிய, பெரிய அளவிலான அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டிருக்கின்றன?

திரு. இரா. அருணாசலம் (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவர வர்களே, 1—4—1978 முதல் 31—3—1979 முடிய எடுத்த கணக்குகளின் அடிப்படையில் பெண்ணாத்தூரில் உள்ள காச நோய் சிகிச்சைப் பிரிவிற்கு வந்த 2 பெரிய அறுவை சிகிச்சைகள் பக்கத்திலுள்ள வேலூரிலே உள்ள மாவட்டத் தலைமை மருத்துவமனையிலும், 30 சிறிய அறிவைச் சிகிச்சை களும், 10 புற நோயாளிகளுக்கான அறுவை சிகிச்சைகளும் பொண மல்லூர் காச நோய் சிகிச்சை நிலையத்திலும் செய்யப்பட்டன.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், வட ஆற்காடு மாவட்டத்திலே பீடித் தொழிலாளர்களும், டானரி தொழிலாளர்களும் அதிக அளவிலே இருக்கிறார்கள். அவர்களுக்குத்தான் அதிகமாக டி.பி. வந்து தொல்லை கொடுக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? இந்தத் தொழிலாளர்களுக்குத் தேவையான அளவிற்குப் படுக்கை வசதி மருத்துவ மனையில் இல்லாத காரணத்தால் கிட்டத்தட்ட 600 பேர்களுக்கு மேல் ரிசர்வ் செய்து விட்டு, அதில் பலருக்கு அவர்கள் இறந்த பிறகு இடம் இருப்பதாகத் தகவல் வருகிறதே. இதைப் போக்குவதற்கு உடனடியாக 100 படுக்கைகளை இந்த மருத்துவமனையிலே அமைக்க வேண்டுமென்று மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே கூடத் தீர்மானம் போடப் பட்டுள்ளது. இதன்மேல் அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திரு. இரா. அருணாசலம் (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவர வர்களே, இது பற்றிக் கவனிக்கப்படும்.

[979 நவம்பர் 8]

வட ஆற்காடு மாவட்டத்தில் தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டம்.

* **வினா எண். 79—திரு. கே. ஜே. சுப்பிரமணியம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தீவிர கால்நடை அபிவிருத்தி திட்டத்தை வட ஆற்காடு மாவட்டத்திற்கும் விரிவுபடுத்தும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விபரம் என்ன?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

செல்வனூர் காட்டுப் பகுதியில் ஆட்டுப்பண்ணை.

* **வினா எண். 80—திரு. ஆர். சி. சுப்பிரமணியம்:** மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலாடி தொகுதி செல்வனூர் காடுகளில் உலக வங்கி உதவியோடு ஆட்டுப் பண்ணையமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: உலக வங்கியின் நிதியுதவியுடன் ஆடுவளர்ப்புத் திட்டம் செயல்படுத்த ரூ. 47.50 கோடிக்கு திட்ட அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டு, உலக வங்கியின் நிதியுதவி கோர மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இறுதியான பதில் மத்திய அரசினிடமிருந்து பெறப்படவில்;ல. அதில் உத்தேசிக்கப்பட்டுள்ள பல்வேறு திட்டங்களில் 5,000 ஏக்கர் பரப்பில் அயலின ஆடு வளர்ப்புப் பண்ணை நிறுவுதலும் ஒன்று. ஒப்புதல் பெறாத நிலையிலும் இடத்தேர்வுக்காக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கலந்தாலோசிக்கப்பட்டனர். கடலாடி தொகுதி செல்வனூர் பகுதியிலும் நிலம் இருப்பதாக இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியாளர் குறிப்பிட்டுள்ளார். இடத்தேர்வு குறித்து கால் நடை பராமரிப்பு இயக்குநரின் கருத்து கோரப்பட்டுள்ளது..